# ஜைன முனிவர்கள்
## இயற்றிய
# நாலடியார்

## கடவுள் வாழ்த்தில் காணும்
## வானவில் ஆராய்ச்சி

ஜீவபந்து. T.S. ஸ்ரீபால்

ஜைன முனிவர்கள் இயற்றிய

நாலடியார் கடவுள் வாழ்த்தின்

# வானவில் ஆராய்ச்சி

604.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்
29 ஜூலை 1982
தஞ்சாவூர்-613001

ஜீவபந்து - T. S. ஸ்ரீபால்

ஆசிரியர் :

இளங்கோவடிகள் சமயம் யாது? பகுத்தறிவியக்கத்தின் பழைமை,
ஆதிபகவனும் ஆச்சாரிய விநோபாஜீயும்,
எம்மான் கோயில், சமணர்மலை செல்வோம்,
வள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்.

வெளியிடுதல் :

ஜைன இலக்கிய ஆராய்ச்சிக் கழகம்

(Jain Literature Research Society)

34, சுப்பிரமணிய முதலி வீதி, சென்னை-1.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்
29 ஜூலை 1982
தஞ்சாவூர்

7627

பல்கலைக்கழக
29 1982

## முன்னுரை

***ஆராய்ச்சி அறிவு**

ஆராய்ச்சித் துறை ஒரு தனிக்கலை. அது சிந்தனையைக் கிளறுவது. ஆழ்ந்து [illegible]வது. ஆராய்ச்சி அறிவுடையவர்களைப் பேரறிவு பெற்றவர்கள் என்று கூறலாம். ஆராய்ச்சியாளர்களின் கொள்கைகளைப் பெரும்பாலும் அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ளுகிறது. எழுத்தாளர்களிலே ஆராய்ச்சி யறிவுடையவர்கள் தலைசிறந்தவர்கள் எனில் அது மிகையாகாது. இலக்கிய உலகுக்கும் வரலாற்றுத் துறைகளுக்கும் இன்றியமையாதவர்கள். ஆராய்ச்சியாளருக்குரிய தனிப்பண்பு காய்தல் உவத்தல் அகற்றி உண்மை காண்பதாகும். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் ஆராயும் இயல்பு அவர்களுக்கு அமைந்திருக்க வேண்டும். இல்லையேல் கலை உலகமும் வரலாற்று உலகமும் அதிர்ச்சி யுறும். அறிவு உலகில் மயக்கமும் ஐயமும் புகுந்து குழப்பத்தை உண்டாக்கும். நேர்மையும், நீதியும் மாயும். பொய்மை வளரும். எனவே, ஆராய்ச்சித் துறையில் பணியாற்ற விழைபவர்கள் தங்கள் பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் நமது பாரத நாட்டிலும் சிறப்பாகத் தமிழகத்திலும் நடுநிலைமை தவறாத நல்லறிவாளர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் அளித்துவரும் அறிவு சான்ற ஆராய்ச்சி நூல்கள் உலக இலக்கிய அரங்கில் நற்புகழ் பெற்றிருப்பதுடன் பல உண்மைகளை அறியச் செய்துள்ளன. இப்பெரியோர்கள் தங்களையும் தங்கள் சமயங்களையும் மறந்து பண்டைய வரலாற்று உண்மைகளைக்காண விழைந்தவர்கள். வேறுசிலர் ஆராய்ச்சியாளருக்குரிய முறைமையை மறந்து சமயக் காழ்ப்புக் கண்ணோட்டத்தோடு பண்டைய

---

*நல்லறம் ஆனி மாத இதழின் தலையங்கம்.

இலக்கண இலக்கியங்களிலும் புதைபொருள் ஆராய்ச்சித் துறைகளிலும் பற்பல பேராராய்ச்சிகளைச் செய்துள்ளார்கள். இவர்களால் பாதிக்கப்பட்டவைகள் பெரும்பாலும் ஜைன சம்பந்தமானவைகளே யாகும். ஜைன சமயக் கலைச்செல் வங்கள் உலகுக்கு உரை செய்யுமை. அவைகள் அறிவுப் புதையல்கள், அன்புப் புதையல்கள், அருட்புதையல்கள், எவ்வுயிருக்கும் தீங்கு நினையாத இன்பப் புதையல்கள். அப் புதையல்களைப் பலவாறாக ஆராய்ந்தெடுத்து உலகுக்கு அளிப்பின் மக்கள் வாழ்க்கை நிலையில் மறுமலர்ச்சி உண் டாகும். சகோதர உணர்ச்சியும் சமாதானமும் நிலவும். பொருளாதார சமத்துவம் இடம்பெறும். அவ்வாறே மலை களிலும், குகைகளிலும், சாலை ஓரங்களிலும், பூமிக்கு அடி யிலும், கிராமங்களிலும், நகரங்களிலும் சிதறிக் கிடக்கும் ஜைன சமயச் சிற்பங்களையும், கல்வெட்டுச் செய்திகளையும் அறவோர் பள்ளிகளையும் ஆராய்ந்து வெளியிடின் வரலாற்று உலகில் பற்பல புதுச்செய்திகளைக் காணலாம். நமது தமிழகத்தின் பண்டைய பெருமையும், நாகரிகமும் அறிவும் அறனும் எத்தகைய உயரிய நிலையில் விளங்கியிருந்தன என்பது புலனாகும்.

ஜைன அறவோர்கள் தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் தமிழர்பண்பாட்டிற்கும் செய்திருக்கும் அரும் பெரும் சேவைகளை அறிஞர் உலகம் நன்கு அறியும். இவ் வுண்மையை சென்னை எழும்பூர் புதைபொருள் ஆராய்ச்சி, கண்காட்சிக் கலைக்கூட்டத்துறை அலுவலகத் தலைவர் உயர்திரு. A. ஐயப்பன் அவர்கள் ஆச்சாரிய வல்லபசூரிஜி நினைவு மலர் நூலுக்கு " ஹிந்து " பத்திரிகையில் மதிப்புரை வழங்கிய பேருரையில் பின்வருமாறு எழுதியுள்ளார்கள் :

" **Jainism is believed by many to be the oldest religion in India.** Its historical beginnings go back to 800 B. C. Its emphsis on

absolute **Ahimsa** and vegetarianism makes it unique among great religions and it looks certain that these two traits were borrowed by Hinduism and Buddhism from Jainism. The contributions of Jaina savants to Tamil and Kannada culture deserve to be better recognised. It is a pity that not even a small fraction of the scholarly attention given to Buddhism has been devoted to Jainism, but fortunately Jainism is still an active, living religion in India with a small but influential following.''

Hindu 15—9—57 A. AIYAPPAN.

"ஜைன மதம் இந்தியாவில் மிக்க பழமையான சமயம் என்று அநேகரால் கருதப்பட்டு வருகிறது. அதனுடைய சரித்திர ஆரம்பம் கி. மு. 800 வருடங்களுக்கு முற்பட்டதாகும். மற்ற மதங்களினின்றும் ஜைனமதம் தன் கொல்லாமை, மரக்கறி உண்ணல் (ஊன் உண்ணாமை) இவைகளின் வலியுறுத்தலால் ஒப்பற்று விளங்குகிறது. மேற்கண்ட இரு கொள்கைகளும் ஜைன மதத்திலிருந்து இந்து மதமும் புத்த மதமும் எடுத்து கையாளப்பட்டு வருவதாக நிச்சயமாகத் தெரிகிறது. தமிழ் கன்னட கலாசார அபிவிருத்திக்கு ஜைன பெரியோர்களின் தொண்டுகள் சிறந்தனவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. புத்த மதத்திற்கு அறிஞர்களால் காட்டப்பட்ட ஆதரவில் ஒரு சிறிதளவு கூட ஜைன சமயத்திற்குக் காட்டாதது வருந்தத் தக்கதாகும். எனினும் அதிர்ஷ்ட வசமாக ஜைன மதம் இந்தியாவில் குறைந்து ஆனல் மதிப்பு வாய்ந்து பின் பற்றுபவரால் உயிருள்ள மதமாகத் திகழ்கிறது."

சென்னை
15–9–57

அ. அய்யப்பன்.

இப்பேராசிரியர் வருந்துவது போன்று ஜைன சமயத் திற்கு ஆதரவு காட்டாதது மட்டுமன்று, ஒரு சிலர் ஆராய்ச்சி யென்னும் பெயரால் ஜைன சமய இலக்கண இலக்கியங்களையும் நீதி நூல்களையும் மற்றும் பல கலைகளையும் மாற்றாந்தாயின் மனப்பான்மையில் நோக்குகின்றார்கள். ஏன் ! பகைமை உணர்ச்சியோடு பார்க்கின்றார்கள் எனில் மிகையாகாது. ஜைன சமய சம்பந்தமான வரலாறுகளையும் சிறப்புக்களையும் இருட்டடிப்புச் செய்தும் வருகின்றார்கள். மற்றும் சிலர் ஜைன சமய நூல்களை வெளியிடுகையில் அவைகளின் ஆசிரியர்களைப் பற்றிய உண்மைச் செய்தி களையும் சமயத்தையும் மறைத்தும் மாற்றியும் வெளியிடு கிறார்கள். இச்செயலை சென்னைப் பல்கலைக்கழகமும் அரசாங்கமும் கண்காணித்து வருவதுடன் ஜைன சமயக் கலைகளைப் பாதுகாப்பதில் பெரிதும் அக்கறை காட்டவேண்டு மெனத் தமிழ்த்தாயின் சார்பாகக் கேட்டுக்கொள்ளு கிறேன். இல்லையேல் இவர்கள் வெளியிடும் நூல்களால் கலை உலகமும், வரலாற்று உலகமும் எந்நிலை எய்தும் என் பதை எண்ணிப் பார்க்கும்போது, உண்மையிலேயே நமக்கு உள்ளம் பதைக்கிறது. இவர்கள் செயல்களுக்கு எடுத்துக் காட்டாக, மே மாதம் 'அமுதசுரபி' திங்களிதழில் திரு. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் 'வானவில்' என்னும் தலைப்பின்கீழ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றே சாலும்.

பல நூற்றாண்டுகளாக வழங்கி வரும் நாலடியாரைப் பற்றிய வரலாற்றையும், அதன் ஆசிரியர்களையும், கடவுள் வாழ்த்தின் கருத்துக்களையும், உரையாசிரியர் பதுமனாரை யும், மதுரைமா நகரைச்சுற்றி மாண்புடன் நின்று நில்விப் பற்பல வரலாற்றுச் சின்னங்களைத் தம் மகத்தே கொண்டு விளங்கும் எண்பெரும் சமணர் குன்றுகளையும் மதமாற்றஞ் செய்ய முயற்சிக்கும் அவர்தம் ஆராய்ச்சி அலங்கோலத்தை அறிவதே இந்நூலின் நோக்கமாகும். அறிஞர் பெருமக்கள்

நடுநின்றுராய்ந்து உண்மையை உலகுக்கு உரைத்தருள வேண்டுகிறேன்.

சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிருஸ்தவமும் தமிழும், மகேந்திர பல்லவன், மாமல்லபுரத்து ஜைன சிற்பங்கள் போன்ற பல அரும்பெரும் நூல்களின் ஆசிரியரும், சமன்செய்து சீர்தூக்கும் கோலின் சின்னம் போன்றவருமாகிய உயர்திரு. மயிலை - சீனி. வேங்கடசாமி அவர்களை இந்நூலுக்கு அணிந்துரை அளிக்குமாறு வேண்டிக்கொண்டேன். அப்பெரியாரும் திரு. கி. நா. சு.வின் போக்கைக் கண்டு உள்ளம் பதைத்து வருந்தி இந்நூலுக்கு ஆர்வமோடு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்னும் ஆன்றோர் மொழிக்கேற்ப எப்பொருளையும் நடுநின்றுராயும் நல்லாராய் விளங்கும் உயர்திரு. மயிலை-சீனி. வேங்கடசாமி அவர்களின் அணிந்துரையால் புலவர் உலகம் எனது சிறு கட்டுரையாம் இந்நூலினை நன்கு வரவேற்கும் எனப் பெரிதும் நம்புகின்றேன். இத்தகைய ஒப்பற்ற அணிந்துரை வழங்கிய பெரியாருக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்நூலினை அழகுற அமைத்துத் திருத்தமுடன் அச்சிட்டுத் தந்த நமது தமிழ்ப்பெரியார் திரு. வி.க. அவர்களின் அறிவிற் கலந்த சாது அச்சகத்தின் நிர்வாகி உயர்திரு. மு. நாராயணசாமி அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கம் உரித்தாகுக.

சென்னை }
1-10-58 }

அன்பன்
T. S. ஸ்ரீபால்

நடு நின்றாராயும் நல்லார்

**உயர்திரு. மயிலை - சீனி. வேங்கடசாமி அவர்களின்**

# அணிந்துரை

நாலடியார், சமண சமய முனிவர் இயற்றிய சமண சமய நூல் என்பதைத் தொன்று தொட்டு எல்லோரும் அறிவர். இக்காலத்து, நாலடியாரை நன்கு அறியாத சிலர், அது ஆசீவகமத நூல் என்று கூறத் துணிந்தனர். இவ்வாறு மனம்போனபடி எல்லாம் எழுதுவது 'ஆராய்ச்சி' என்று சிலர் கருதுகிறார்கள். இவர்களுடைய தவறுகளை யறியாத பாமர மக்கள் இவர்கள் எழுதுவதை உண்மை என்று நம்பிவிடுகின்றனர். அவ்வாறு மயங்காமல், உண்மையை உணர்த்துவதற்கும் போலி ஆராய்ச்சியை மறுப்பதற்கும் ஜீவபந்து - T. S. ஸ்ரீபால் அவர்கள் இச்சிறு ஆராய்ச்சி நூலை எழுதியிருக்கிறார்கள். இதில், நாலடியார் ஆசீவகமத நூல் அன்று; ஜைன சமய நூலே என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். திரு. T. S. ஸ்ரீபால் அவர்கள் கூறும் காரணங்களும் ஆதாரங்களும் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மைகளாகும்.

சென்னை
1-10-58

சீனி. வேங்கடசாமி

7627

# சமர்ப்பணம்

நமது மதிப்புக்குக்குரிய -பெரியாரும் முன்னாள் டிப்டி கலெக்டருமாகிய வீடூர் - உயர்திரு. S. விருஷபதாஸ் ஜெயின் அவர்களின் அருமை இளைய குமாரர் மணி என்னும் செல்வப்பெயரைக் கொண்ட திரு. V. லக்ஷ்மிவிஜயன் B.A. (Hons.) அவர்கள் என் உள்ளங்கவர்ந்த ஓர் இளைஞர். நான் நமது மாபெருந் தலைவர் ராவ்பகதூர் A. சக்கரவர்த்தி நயினார் M.A., I. E. S. (Rtd.) அவர்களைக் காணச்செல்லும் போதெல்லாம் திரு. மணி அவர்கள் தமது கல்லூரியில் ஜெயின சமயத்தைப்பற்றி ஆசிரியர்கள் கூறும் சிறப்புரைகளை என்னிடம் கூறி மகிழ்வார். குறிப்பாக நாலடியாரையும் திருக்குறளையும் பற்றிய ஆசிரியர்களின் கருத்துரைகளைப் பாராட்டியும் அவர்களின் நேர்மைக்கு நன்றி செலுத்தியும் என்னையும் அவர்தம் தாத்தாவாகிய பேராசிரியரையும் மகிழ்ச்சியிலாழ்த்துவார். இவ்விளைஞரின் சமயப் பற்றும் அறிவின் திறனும் எதிர் காலத்தில் நமது நாட்டிற்கும் ஜைன சமயத்திற்கும் உறு துணையாயிருக்குமென எண்ணி யான் பூரிப்பதுண்டு. நமது பேராசிரியரின் வாரிசாக விளங்குவாரென்றும் எண்ணி மகிழ்வேன். எனது எண்ணத்திற்கு எதிராகி விட்டது காலனின் செயல். பிணிகளாகிய படைகளைக்கொண்டு உயிர்களைப்பறிக்கும் பாழுங் கூற்றுவன் இக்காலத்தில் மோட்டார்களையும், வான ஊர்திகளையும் பயன்படுத்த முனைந்து விட்டான்.

எனது அன்பிற் கலந்த திரு. மணி அவர்கள் திடீரெனக் கார் விபத்துக்களாகி நம்மை யெல்லாம் விட்டு மறைந்தார். அவர்தம் மறைவு நமது சமயத்திற்கும் நாட்டிற்கும் பெருத்த நஷ்டமாகும். இத்தகைய அறிவு சான்ற இளைஞரின் நினைவு என்றும் நமது உள்ளத்தில் நின்று நிலவ இந்நூலினைத் திரு. மணி அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

சென்னை
1–9–58

இங்ஙனம்
T. S. ஸ்ரீபால்

திருவறம் வளர்க

## ஜைன முனிவர்கள் இயற்றிய

## நாலடியார்

### கடவுள் வாழ்த்தில் காணும்

# வானவில் ஆராய்ச்சி

### நாலடியார் வரலாறு

நாலடியாரைப்பற்றி வழங்கும் வரலாற்றைப் பலரும் நன்கறிவர். ஒரு காலத்தில் நமது தமிழகத்தின் ஒரு பாகத்தில் பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக எண்ணாயிரம் சமண முனிவர்கள் பாண்டிய நாட்டை அடைந்தார்கள். பாண்டியன் அம்முனிவர்களை ஆதரித்து வந்தான். பஞ்சம் நீங்கியதும் அவர்கள் தங்கள் இருப்பிடங்களில் ஒவ்வொரு ஏட்டில் ஒவ்வொரு வெண்பாவை எழுதி வைத்து, அரசர் அறியாவண்ணம் அவ்வூரை விட்டுச் சென்றனர். மன்னன் அம் முனிவர்களின் பிரிவாற்ருமையால், அவ் வேடுகளை வையை யாற்றில் விட்டு விடும்படி ஏவினன். அவைகளில் நானூறு ஏடுகள் நீரை எதிர்த்துச் சென்றன. அது கண்டு வியப்புற்ற மன்னன் அந் நானூறு ஏடுகளை எடுக்கச் செய்து, அவற்றின்கண் அமைந்திருந்த பாடல்களைப் படிக்கச் செய்தான் என்பதே அவ்வரலாறு. இதற்குச் சான்ருகப் பல வெண்பாக்களும், பாயிரங்களும் இதுவரை வெளிவந்துள்ள பல நாலடியார் நூல்களிலும் கண்டுள்ளோம்.

பாண்டிய மன்னனுக்குப் பின்னர் பதுமனார் என்பவர் நாலடியாரை அதிகாரங்களாக வகுத்து, கடவுள் வாழ்த்தும், உரையும் எழுதினார் என்பதும் தொன்று தொட்டு வழங்கி வரும் செய்தியாகும். நாலடியாருக்கு உரை எழுதிய பிற்கால உரை யாசிரியர்கள் பலரும் பதுமனார் உரையைத் தழுவி எழுதியதாகவே குறித்துள்ளார்கள். ஆனால் பதுமனார் உரையை யாரும் வெளியிடவில்லை. அண்மையில் தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீட்டாரால் வெளியிடப்பட்ட நாலடியார் உரை வளம் என்னும் நூலில் பதுமனார் உரை வந்திருக்கிறது. பதுமனார் கடவுள் வாழ்த்திற்கு எழுதிய உரையை நோக்கும்போது, கடவுள் வாழ்த்து பதுமனாரால் இயற்றப் பட்டதல்ல என்பது புலனாகும். அவ்வுரையை அறிஞர் உலகுக்கும் அறிமுகம் செய்வது இன்றியமையாத தாகும். அவ்வுண்மையைக் காண்போம்.

பதுமனாரும் கடவுள் வாழ்த்தும்

" வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை—யாநிலஞ்
சென்னியுற வணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னியவை முடிக வென்று "

பதுமனார் உரை :

" வானிடு வில்லின் வரவு போன்றிருந்த வரவினை யறிந்து, கானிலந் தோயாக் கடவுளையாம் நிலத்தில் சென்னி யுற வாய்மையால் வணங்கிச் சேர்து மெம்மனத்து நினைத்தன முடிவனவாக என்றவாறு.

இதற்கிவ்வாறன்றிப் பிற வாற்றானும் பொருளுரைப் பாரு முளர். வானிலேதோற்றப்படா நின்ற வில்லினது வரவு போன்ற பிறப்பியல்பை மெய்ம்மையாக வறிந்து, பூவின்மேல்

வந்தருளு மிறைவனை யாஞ் சென்னியாலே உற வணங்கிச் சேர்து மென்றது நினைந்தன முடிவனவாக வென்றவாறு.

பிறப்பியல்பிற்கு முற்றுவம மாதலால் வானிடு வில்லுவம மாயிற்று. வரவு ஈண்டியல்பு. அறியாவெனவே அறிந்தெதன் பதாயிற்று. வாய்மையாலென்றது இறைவனை வணங்கு வாற்குப் பொய்யா வாய்மையாற் படுவதின்மையிற் பிறப் பியல்பை மெய்யாக வறிந்தென்பதாம். காணிலந் தோயாக் கடவுளை யென்பது கடவுளரோ டொத்தள வினரன்றி யொத் தாரும் மிக்காரு மில்லாத விறைவற்குக் காணிலந் தோயப் படாமையும் பொதுவாகிய இயல் பொன்றையுமே யிவர்க்குக் கூறும் பான்மையல்லாமையும் பூவின்மேல் வந்தருளு மிறைவ னென்பது. கருத்து. யாநிலஞ் சென்னியுற வணங்கிச் சேர்து மென்றது வணக்கங்கள் பலவாதலின் வண்மையாற் சமய வணக்கத்தியல்பு தோன்ற யாம் நிலத்திலேயுற வணங்கிச் சேர்து மென்றார்."

இங்கே "இதற் கிவ்வாறன்றிப் பிறவாற்றானும் பொரு ருரைப் பாருமுளர்" என்பதால் பதுமனாருக்கு முந்தியே இக் கடவுள் வாழ்த்தும் அதற்குரிய வேறு உரைகளும் வழக்கில் வந்துள்ளன என்பதும், அவ்வுரைகளில் "வானிலே தோற்றப்படும் வில்லினது வரவு போன்ற பிறப்பியல்பின் மெய்ம்மையை அறிந்து பூவின்மேல் வந்தருளும் இறைவனை" என விளக்கப்பட்டிருந்தன வென்பதும் பதுமனாரால் வெளி யாகிறது.

மேலும் பதுமனார் தமது உரையினும் பழைய உரையே சாலச் சிறந்ததெனக் கொண்டு அதற்கு விளக்கமான விரி வுரையும் எழுதியுள்ளார். பிற்கால உரையாசிரியர்கள் பலரும் பதுமனாருக்கு முற்பட்டதும், அவரால் சிறப்பிக்கப்பெற்றது மான உரையையே பின்பற்றி நாளிது வரை உரை எழுதி வருகின்றனர். இவ்வுண்மைகளை அறியாத திரு. தி. நா. சுப்பிர

மணியமவர்கள் நாலடியாரின் கடவுள் வாழ்த்து பதுமனூரால் இயற்றப்பட்டதெனும் வழக்கைக் கொண்டு அதற்கு தான் ஒரு புத்துரை கண்டுள்ளார் அமுதசுரபியிலே. ("வானத்தில் தோன்றும் இந்திர வில்போல் இன்னவாறு வந்தனன் என்று அறியாமல் தோன்றுவான் என்பதை உணர்ந்து எம் உள்ளத்தில் நினைத்தவை முடிய வேண்டுமென்று நினைத்துப் பூமியில் பாதம் படியாத முழுமுதற் கடவுளை நாம் பூமியில் தலை பொருந்த வணங்கி அடைவோம்.") இவ்வுரையால் திரு. தி. நா. சு.வின் போக்கு நன்கு விளங்குகிறது. பதுமனூர் எழுதிய உரையையும் தழுவாமல் அவர் சிறப்பித்துக் கூறும் உரைகளையும் பாராமல், தனது எண்ணத்தை நிலைநாட்டத் தன் மனம்போன போக்கில் ஒரு கற்பனை உரையை எழுதிக் கொண்டார். இவ்வாறு கூறும் இயல்பைத் தன்னகத்தே கொண்ட திரு. தி. நா. சு. தனது வானவில் கட்டுரை முழுமையும் மாற்றிக் கூறும் அடிப்படையிலேயே சென்றிருக்கிறார். பாம்பறியும் பாம்பின் கால் என்னும் பழமொழிப்படி அவர்தம் கட்டுரையை வாசிக்கும் அறிஞர்கள் அவர் போக்கை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

இவர், பொருத்தமற்ற தனது உரையைக் கொண்டு மேலும் பின்வருமாறு எழுதுகின்றார் :

"இப்பாடலில் காணும் இந்திர வில்லின் உண்மையை ஜைனர்கள் ஒப்புக்கொள்வதில்லை. பரிகசித்து மறுத்துக் கூறுவர். அது நீலகேசி என்னும் ஜைன மத நூலிலிருந்து தெரிகிறது."

## நீலகேசியும் ஆசீவக சமயமும்

இவர் கூறும் இக் கூற்றை நீலகேசியினின்றே ஆராய்வோம். நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று. காப்பியத் தலைவியான நீலகேசி பல சமயத் தலைவர்களுடன் வாது

செய்துதோற்கடிக்கின்றாள். அவள் ஆஜீவக சமயத்தலைவனான பூரணன் என்பவரைக் கண்டு வாதிக்கையில், அவன் தனது சமயக் கடவுளின் தன்மையை,

" உரையான் இறைவன் உணாவும் இலனாய்த்
திரையான் நரையான் தெரிவில் உருவம்
வரையா வகைவா னிடுவில் அனையன்
புரையா அறிவிற் புகழ்பூ ரணனே "

எங்கள் இறைவன் மௌனமாக இருப்பவன். ஆகாராதிகள் அருந்தாதவன். நரை திரை மூப்பு இல்லாதவன். ஆகாயத்தில் காணும் வானவில்லைப் போலத் தோன்றும் தோற்றத்தை யுடையவன் எனக் கூறுகின்றான். இதனைக் கேட்ட நீலகேசி உங்கள் கடவுள் பேரறிவாளன் எனக் கூறுகின்றாய். அவன் உரையாடான் என்றும் சொல்லுகின்றாய். அவ்வாறாயின் தான் அறிந்தவற்றை பிறர்க்கு உரைக்காமலிருப்பதின் காரணம் என்ன? மக்களிடம் அவருக்குச் சீற்றம் பிறந்து விட்டதோ? என்றெல்லாம் பல பாக்களில் பரிகசித்துக் கடைசியாக,

" வானிடு வில்லின் வரவறியாத வகையனென்பாய்
தானுடம்போடு பொறியினனாதலின் சாதகனா
மீனடைந் தோடும் விடுசுடரான்கதிர் வீழ்புயன்மேற்
றானடைந் தாற்றனு வாமிது வாமதன் றத்துவமே "

" வானத்து இந்திர தனுசுப்போல இன்னவாறு வந்தனனென்று அறியாமல் தோன்றுவான் எம்முடைய ஆப்தன் என்று சொல்லுவாய். அவன் சரீரேந்திரியபுத்தியாதிகளுடையனாதலின் பிறப்புடையனும்; சரீராதிகளையுடையான் பிறப்புடையனாகக் காணப்படுதலான். இனி ஆதித்திய கிரணம் மேக படலத்துப்பட்டால் வில்லுப் பிறக்கும்; அதுபோல்

7627

மற்கலி தேவனும் காரணஜன்யனுக விசைதியோ வென்ற வாறு."

இங்கே ஆஜீவகருடைய, கடவுள் பிறப்பிறப்பை உடையவர் என்பதை மெய்ப்பிக்க அவர்கள் கூறும் "வானிடுவில்லின் வரவறியாத வகையான்" என்னும் உவமையையே விளக்கிக் காட்டியுள்ளார் நீலகேசி.

இதனுல் ஆசீவகரின் கடவுள் தத்துவம் வீழ்ந்து விடுகிறது.. ஆசீவகத் தலைவன் பூரணன் வாதத்தில் தோற்று விடுகின்றான். வானிடுவில் உவமையை கடவுளுக்குப் பொருத்திக் கூறுதல் பொருந்தாது என்பதை மெய்ப்பிக்கவே வானிடுவில் உவமையைப் பரிகசித்தாள் நீலகேசி. நாலடியாரில் காணும் வானிடுவில் உவமை, கடவுளைச் சார்ந்ததல்ல. உயிர்களின் வாழ்க்கை நிலையாமையைப் படம் பிடித்துக் காட்டுவது. நாலடியார் தோன்றிய காலம் முதல் அந்நூலில் காணும் வானிடுவில்லை மக்களின் வாழ்க்கை நிலையாமைக்கே, உரையாசிரியர்கள் பலரும் உவமை காட்டி வந்துள்ளார்கள் என்பதைப் புலவர் உலகம் நன்கு அறியும். நாலடியார் ஜைன சமயத்தைச் சார்ந்ததல்லவெனக் காட்டவேண்டி திரு. தி. நா. சு. அவர்கள் கடவுள் வாழ்த்திற்குத் தானே ஒரு புத்துரையை வலிந்து எழுதிக்கொண்டார் போலும் !

மேலும், ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் கடவுளுக்கெனத் தனிச் சிறப்பொன்றைக் கூறுவார்கள். அவ்வாறு ஆஜீவக சமயக் கடவுளுக்குத் தனிச் சிறப்பு மௌனம் சாதித்தலே யாகும். நீலகேசியில் ஆஜீவகக் கடவுளைப் பற்றி, பூரணன் கூறுகையில் வாய் பேசாமை, உண வருந்தாமை, நரை, திரை, மூப்பு, சாக்காடு இல்லாமையாகிய தன்மையைக் கூறினனே யன்றி கானிலந் தோயாமையை யாங்கணுங் கூறவில்லை. திரு. தி. நா. சு. அவர்களோ கானிலந்

தோயாமையை ஆஜீவக சமயக் கடவுளுக்குப் புதிதாக ஏற்றி உரை கூறியுள்ளார்.

### கானிலந் தோயாக் கடவுள்

கானிலந் தோயாமை ஜைன சமயக் கடவுளுக்கே உரிய தனிச் சிறப்பென்பதைப் பண்டைய நூல்களிற் பரக்கக் காணலாம். அருகக் கடவுள் மலரின் மிசை நடந்தவராகையால் அவர் கால்கள் பூமியில் பதிந்ததில்லை. எனவே அவரை கானிலந் தோயாக் கடவுள் எனப் போற்றுவது இயல்பேயாகும்.

பதுமனார் தமது விளக்க உரையில் "பூவின்மேல் வந்தருளு மிறைவன் என்பது கருத்து" என எழுதியுள்ளார். இக்கருத்தை மெய்ப்பிக்க அருகக் கடவுள் மலர்மிசை நடந்தவன் என்னும் வரலாறு ஒன்றே சாலும்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" —திருக்குறள்

"மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லது" —சிலப்பதிகாரம்

"விரிபூந்தாமரை மேற்சென்ற திருவாரடி யேத்தி"
—சீவக சிந்தாமணி

"விரைமலர்ந்த தாமரைமேல் விண்வணங்கச் சென்றாய்"
—சூளாமணி

"விரையார் மலர்மிசை வருவார்" —திருக்கலம்பகம்

இங்ஙனம் மலர்மிசை நடந்தவன் என்பதால் அவர் திருவடிகள் பூமியிற் படியாவென்பது சொல்லாமலே விளங்கும். இவ் வரலாற்றை வலியுறுத்தத் திருநூற்றந்தாதியில்,

"பூரணையாற் பதினாற் கயிற் றொக்கப் புவன மெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய தொக்கு நிவந்த சிங்கம்

பேரணையாற் கிணையாரு மில்லாப் பெரியோர்க்கு விண்ணோர்
பாரணையா வடிதாங்கச் செந்தாமரை பாரித்ததே "

என்றார். இச் செய்யுளின் ஈற்றடியாகிய "பார் அணையா அடி தாங்கச் செந்தாமரை பாரித்ததே" என்னும் வரி "கானிலந் தோயாக் கடவுள்" என்னும் நாலடியார் கருத்துக்கு அரணாக அமைந்து, நமது ஆராய்ச்சிக்குப் புதை பொருளாகவும், அறிவு உலகுக்குக் கலங்கரை விளக்கமாகவும் காட்சியளிக்கிறது என்பதை அன்பர் அறிவாராக.

## எண் பெருங் குன்றங்கள்

இனி, எண் பெருங் குன்றுகளையும், சமண முனிவர்களையும் ஆராய்வோம். சமணர் என்றசொல் சிரமண என்னும் வடசொல்லின் திரிபே யாகும். சிரமணர் என்றாலும் சமணர் என்றாலும் பொதுவாகத் துறவிகளையே குறிக்கும். சமணர் என்றால் முற்றுந் துறந்தவர். இன்பம் துன்பம் இரண்டையும் சமத்துவமாக ஏற்பவர். நட்பு பகை அற்றவர். 'யான்' 'எனது' என்னும் செருக்கு அறுத்தவர். இன்னோரன்ன பல தூய ஒழுக்கங்களையுடைய துறவிகளுக்கே சமணர் எனும் பெயர் வழங்கிற்று. இச் சொல் முதன் முதல் ஜைன துறவிகளுக்கே உரியதாக அமைந்திருந்தது. இன்றும், சிறப்பாக சமணர் என்றால் ஜைனர்களையே குறிக்கும். இச் சொல்லைப் பிற்காலத்தில் தோன்றிய பௌத்தர்களும் ஆசீவகர்களும் தங்களுடைய துறவிகளுக்கும் ஏற்றிக்கொண்டனர். எனினும் அவர்கட்குச் சமணம் என்ற சொல் விரவி வழங்கவில்லை. ஆசீவகத் துறவிகள் ஆடையின்றி இருந்தாலும் அவர்களுக்குரிய துறவற ஒழுக்கங்கள் வேறு. அவர்கள் மலைகளில் வசித்ததாகத் தெரியவில்லை. அம் முனிவர்கள் கையில் ஒரு தடியும், படுக்கைக்கு வேண்டிய தடுக்கும் வைத்திருந்தார்கள். பிழைப்புக்காகத் துறவு பூண்டவர்கள் என்றும் கூறுவதுண்டு.

" தடுக்கினை இடுக்கி மடவார்கள் இடுபிண்ட மதவுண்டு
உழல்தரும் கடுப்பொடி உடற்கவசர் "

என ஞானசம்பந்தர் தேவாரத்தால் அறியலாம்.

அச் சாதுக்களைப்பற்றிப் புத்தர் கூறுகையில் அவர்கள் பெண்களோடு சேருவதைப் பாவமல்லவென்று கூறுகிறவர்கள் ; அவர்கள் பெண்களின் அடிமைகள் என்றும் கண்டித்துள்ளார். இதனை மெய்ப்பிக்க புத்தமத நூலாகிய " மஜ்ஜிமனிகாய " என்னும் நூலில் ஆசிவக சாதுக்கள் அப்பிரம்மச்சாரிகள் எனக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய ஆபாசத் துறவு அல்ல நாலடியாரில் காணும் துறவுநிலை. அஃது தூய துறவறத்தை வற்புறுத்துவது. இல்லறத்திலுடையவரும் பிறர் மனையை விரும்பலாகாதெனும் பேரறத்தை யுடையது நாலடியார். அது மட்டுமன்று, ஆன்ம தத்துவத்திலும் ஆசீவகக் கொள்கைக்கும் நாலடியாருக்கும் முரண்பாடுகள் நிறையக் காணப்படுகின்றன. இஃதிவ்வாறாக ஞானசம்பந்தர் ஆசீவகத் துறவிகளையும், பௌத்தத் துறவிகளையும், ஜைன சமயத் துறவிகளையும் சேர்த்துத் தமது தேவாரப் பாக்களில் ஒருங்கே பழிக்கும் பாக்களும் இருக்கின்றன.

" நல்லா ரறங்சோல்ல பொல்லார் புறங்கூற
அல்லார் அலர் தூற்ற " —திரு. ஞா. தே. பதிகம் 84

" கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால் "
—திரு. ஞா. தே. பதிகம் 307

இப்பாக்களில் நல்லார் அறங் கூற என்பது ஜைன சமயத்தையும், பொல்லார் புறங்கூற என்பது பௌத்த சமயத்தையும், அல்லார் அலர் தூற்ற என்றது ஆசீவக சமயத்தையும் குறிக்கும். இவ்வாறே கஞ்சி மண்டையர் (பௌத்தர்) கையிலுண் கையர் (சமணர்) வெஞ்சொல் மிண்டர் (ஆசீவகர்) என்பது

7627

போன்று பல பாக்களில் காணலாம். குறிப்பாக ஜைன அற வோர்களைப் பழிக்கும் பாக்களைக் காண்போம்.

" அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் "

" ஆலும் மயிலின் பீலியமணர் "

" வேத வேள்வியை நிந்தனை செய்துழல் "

" வாது செய் சமணரும் "

" போதியாரும் பிண்டியாரும் "

" சாவாயும் வாதுசெய் சமணர் "

" தூய வெயிலின் றுழல்வார் "

" அரை யோடலர் பிண்டி மருவி "

" உறியோடு பீலி ஒருகையிற் கொள்ளும்
பறிதலைக் கையர் "

" கடு நோன்பு நோற்கும் கொடும் பாவிகள் "

இவைகள் யாவும் ஜைனத்துறவிகளைக் குறிக்கும் பழிச்சொற் களே யாகும். இவ்வாறே பௌத்தர்களையும் ஆசீவகர்களையும் அவரவர்கள் கொள்கைகளைப் பழிக்கும் சொற்களை ஞானசம் பந்தர் தேவாரத்தில் ஆங்காங்கு காணலாம். இவ்வேற்றுமை களை அறியாத திரு. தி. நா. சு. அவர்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தினின்றும் சான்று கூறாமல் கி. பி. 12-ஆம் நூற் றாண்டு அல்லது அதற்குப் பின்னர் தோன்றிய ஒட்டக் கூத்தரின் பாக்களைக் கொண்டு மேற்கோள் காட்டியுள்ளார். ஒட்டக்கூத்தர் பாக்களிலே—

" வேதப் பகைவர் தம்முடம்பு
வீங்கத் தூங்கும் வெம்கழுவிற்கு
ஏதப்படும் எண்பெருங் குன்றத்து
எல்லா அசோகும் எறிகெனவே " —தாழிசை—218

" என்னக் கடிது எண்பெரு வெற்பும் விடா
எண்ணுயிர மூகரும் "

எனும் இரு பாக்களையும் மேற்கோள் காட்டி இதில் காணும் எண்ணுயிர மூகரும், எண்பெருங் குன்றமும் ஆசிவக சமயத்தைச் சார்ந்ததென எழுதியுள்ளார் திரு. தி. நா. சு. "எண்ணுயிரம் மூகரும்" என்பதைக் கொண்டே அவர்கள் ஆசீவக சமயத்தைச் சார்ந்தவரென முடிவு செய்து விட்டார். ஒட்டக்கூத்தர் பாக்களில் காணும் "வேதப்பகைவர்" "அசோக மரம்" "எண்ணுயிரம் மூகர்" ஆகியவைகள் ஜைன சமயத்தைச் சார்ந்தவையே யன்றி ஆசீவக சமயத்தைச் சார்ந்தவை யல்ல எனும் உண்மையை திரு. தி. நா. சு. அறிந்தாரில்லை. அவருடைய வானவில் கட்டுரையில் "ஆசீவக சமயத்தை அறிந்துகொள்ள நூல்களில்லை" என எழுதியுள்ளதினின்றே அவர்தம் ஆராய்ச்சிக் குறைபாடுடையது என்பதைக் காட்டுகிறது. "வேதவேள்வியை நிந்தனை செய்பவர்" என்றும், "போதியாரும் பிண்டியாரும்" என்றும் ஞானசம்பந்தர் தேவாரப்பாக்களில் ஜைன சமயத்தைப் பழித்துள்ளதை முன்னரே கண்டோம். பிண்டிமரம் (அசோகம்) ஜைனசமயத்தின் சின்னங்களில் தலைசிறந்தது. பகவான் விருஷப தேவர் முதல் மகாவீரர் ஈருகவுள்ள தீர்த்தங்கரர்களைப் போற்றும் நூல்களில் அசோக மரத்தின் நிழலில் அமர்ந்தோர் எனப் போற்றப் பெற்றிருப்பதைப் புலவர் உலகமும் வரலாற்று உலகமும் நன்கு அறியும்.

" பிண்டியின் கொழுநிழல் பிறவி நோய்கெட
விண்டவழ் கனைகதிர் வீரன் தோன்றினன் "

—சீவகசிந்தாமணி

" பூமலி அசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம்புவன் எழுத்தே " —நன்னூல்

" அணிநிழல சோகமமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே "

—யாப் - காரி - உரை. மேற்கோள்

" பூமலி அசோகின் நீழல் பொலிந்த வெம்மடிகள் முன்னாள்
ஏமமா முதனூல் சொல்ல " —சூடாமணி நிகண்டு

" சாறு கொண்டளி மூசும் அசோகனே
சார்ந்தவர்க் கருள் செய்யும் அசோகனே " —திருக்கலம்பகம்

இப்பாக்களினின்றும் 'அசோகமரம்' ஜைனசமயத்தைச் சார்ந்த தென ஐயமின்றித் தெளிந்தோம். இவ்வுண்மையால் ஒட்டக் கூத்தர் கூறும் எண்ணாயிரம் மூகரும் எண்பெருங் குன்றமும் ஜைன சமயத்தைச் சார்ந்தவையெனச் சொல்லாமலே விளங் கும். திரு. தி. நா. சு. எண்ணாயிரம் மூகரும் ஆசீவகர் என எழுதியது பொருந்ாது. ஆசீவக சமயக் கடவுளாகிய மற்கலி மட்டும் மூகரே யன்றி அச்சமய சாதுக்கள் பேசா மடந்தைகளல்லர் என்பதை திரு. தி. நா. சு. அறியாதது வருந்தத்தக்கது. எனவே ஒட்டக்கூத்தர் கூறும் எண்ணாயிர மூகர்கள் என்பது ஜைன முனிவர்களே யாவர்.

ஜைன முனிவர்கள் சில விரத நாட்களில் உபவாசங்களை (பட்டினி நோன்பு) மேற்கொள்வார்கள். அந் நாட்களில் மௌன விரதத்தையும் கடைபிடிப்பார்கள். இரவுக் காலங் களில் எக்காலத்தும் பேசவே மாட்டார்கள். இந் நிலையையே 'மூகர்' எனப் பரிகசித்துள்ளார் ஒட்டக்கூத்தர். மேலும் ஜைன அறவோர்கள் உலகியல் சம்பந்தமான ஆசை வார்த்தை களையும் பாப வார்த்தைகளையும் துறந்து அறவுரை பகர் வதையே நோன்பாகக் கொண்டவர்களாகையால் தங்களை இகழ்வோரையும் புகழ்வோரையும் பகையாமலும் பாராட்டா மலும் மௌனமாகச் செல்வார்கள்.

இத்தூய ஒழுக்க நிலையை,

" இகழ்வார்களை வெகுளார் இடருழவார் பிறவிகழார்
புகழ்வார்களை அருளார் மகிழ்புரியார் பிறமகிழார்
திகழ்வான் முடிமிசை வாழ்சினவரன் யானெனுநினைவி
நிகழ்வாரிரு திறமார் துறவாசாள் நிருமலரே "

என்னும் திருக்கலம்பகச் செய்யுளால் அறியலாம். இத்தகைய சிறப்பமைந்த துறவிகளையே மூகர் என்றனர். மகாத்மா காந்தியடிகளின் உபவாசத்தையும் மௌன விரதத்தையும் நாம் நேரே கண்டுள்ளோம். இன்னோரன்ன பல சான்றுக ளால் ஒட்டக்கூத்தர் கூறும் எண்ணாயிர முனிவர்களும் எட்டு வெற்புகளும் ஜைன அறவோர்களையும் அத்தூயோர் தவ மிருந்த மலைகளையுமே குறிக்கும் என ஐயமறத் தெளிந்தோம். இதனை வலியுறுத்த மற்றொரு வரலாற்றை ஆராய்வோம்.

## எண்ணாயிரம் முனிவர்கள் யார் ?

எண்ணாயிரம் முனிவர்கள் என எண்ணும் பொழுதே நமது உள்ளங்களில் சந்திரகுப்த மௌரியப் பேரரசனாகிய மன்னனும் அவர்தம் குருவாகிய பத்திரபாகு சுவாமிகளும், அவருடன் தமிழகம் விஜயம் செய்த எண்ணாயிரம் ஜைன முனிவர்களும் காட்சி யளிக்கின்றனர். அது மட்டுமன்று! அவ்வெண்ணாயிரம் முனிவர்களும், தமிழகச் சுற்றுப்பிரயாண மும், அவர்கள் சிரவண பெளிகுளா சென்றதும், அங்கே பத்திரபாகு சுவாமிகள் கேவல ஞானம் பெற்று வீடுபேறு பெற்றதும், சந்திரகுப்த மன்னரின் தவக்கோலமும் நமது அகக் கண்களின் முன்னே வந்து தோன்றுகின்றன. நமது இந்திய வரலாற்றில் இந் நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க தொன்றாக மதிக்கப்படுகிறது. இவ்வரலாற்றுண்மையை மெய்ப்பிக்கக் கல்வெட்டுச் செய்திகளும், பற்பல சின்னங்களும் காணப்படு வதால் இதனை மறைக்கவும் திரித்துக் கூறவும் இயலாது.

பத்திரபாகு சுவாமிகள் தமது எண்ணாயிரம் சீடர்களுடன் தமிழகம் விஜயம் செய்து ஆங்காங்குள்ள ஜைனக் கோயில்களையும், அறவோர் பள்ளிகளையும், அரசர்களையும், சாவக சாவகிகளையும் கண்டு களித்தும் அறவுரைகள் ஆற்றியும் வந்தனர். இவ்வெண்ணாயிரவரும் தமிழக மலைகளிலே தவமியற்றும் ஜைன முனிவர்களுடன் தங்கி அளவளாவியும் வந்தனர். இவ்வாறு இம்முனிவர்கள் எண்ணாயிரவரும் தமிழகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து தமிழக மக்களின்மனதைக் கவர்ந்தனர். அவ்வறவோர்கள் அறவுரைகளை மன்னர்களும், மக்களும் கேட்டு இன்புற்றனர். அத்தூய தவத்தோர்களை கடவுளர் எனவும் போற்றி வணங்கினர். இந்நிலையை பிற்காலத்தவராகிய கவிச்சக்கரவர்த்தி கம்பரும்,

“ வில்லாள ராணர்க்கெல்லாம் மேலவன் விளிதலோடும்
செல்லாதவ் விலங்கை வேந்தர்க் கரசெனக் களித்ததேவர்
எல்லாருந் தூசுநீக்கி எறிட வார்த்தபோது
கொல்லாத விரதத்தார்தம் கடவுளர் கூட்டமொத்தார் ”

என ஜைன முனிவர்களைக் கட்வுளர் எனப் புகழ்ந்துள்ளார். எனவே அம்முனிவர்கள் தமிழக மக்கள் உயிர் கலந்து, உளங் கலந்து, ஊன் கலந்து விளங்கினர். இவ்வறவோர்கள் பலரும் சிரவண பெளிகுளா சென்று விட்ட பின்னரும் அவர்களைப் பற்றிய நினைவும், அவர்கள் தொகையாகிய எண்ணாயிரமும், அவர்கள் தொடர்பு கொண்ட மலைகளும் மக்கள் மனத்தை விட்டு அகலவேயில்லை. கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் வழங்கிய எண்ணாயிரம் முனிவர்கள் என்ற தொகை எண்ணிக்கையில் குறைந்திருப்பினும் நாலடியார் காலத்தில் கலந்து ஞான சம்பந்தர் கதையில் புகுந்து பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இதனால் எண்ணாயிரம் முனிவர்கள் எனில் எண்ணாயிரம் ஜைன முனிவர்களையே குறிக்கும் என்பதையும், அத்

அம் மலையின் பெயரை அறிய ஆங்கு ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஒரு சிறுவனை அணுகி அம் மலையின் பெயர் என்னவென்று கேட்டோம். அவன் 'ஒந்தை மலை' என்ருன். அதனைக் கேட்டு வியப்புற்ற யாங்கள் அம் மலையின் அருகில் சென்றேம். யானையைப்போல் அமைந்திருக்கும் 'ஆனைமலை,' நாகத்தைப் போன்று விளங்கும் 'நாகமலையை'ப் போலவே, அது ஆந்தையைப் போன்றே அமைந்திருந்தது. ஆந்தைமலை என்னும் பெயர் மருவி ஒந்தை மலையாயிற்று என அறிந்தோம். அம்மலையிலேயும் ஜைன தீர்த்தங்கரர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. எனவே,

"பரங்குன்று ஒருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டுமோ பிறவித் தீங்கு"

என்னும் பெருந்தொகை வெண்பாவிலுள்ள எண்பெருங் குன்றங்களையும் கண்டோமென மகிழ்ந்தோம். ஆந்தை ஒந்தையாகவும் திருஜினப்பள்ளி திருச்சிணப்பள்ளியாகவும் மாறியது போன்று பப்பாரம் என்னும் மலை வேறு பெயராகத் திரிந்திருக்கவேண்டுமென முடிவுசெய்தோம். அதன் பின்னர் யானும், கல்கத்தா, திரு. சோட்டேலால் ஜெயின் அவர்களும் சித்தர்மலை, கழுகுமலை, நாகமலை, கொங்கற்புளியங்குளம், குன்றக்குடி, உத்தமபாளையம், கீழையூர், மேட்டுப்பட்டி, கீளவளவு, கழுகுமலை முதலிய மலைகளையும் சுற்றிப் பார்த்தோம். அம் மலைகளிலும் தீர்த்தங்கரர் சிலைகளும் ஜைன முனிவர்களின் பெயர்களைக் கொண்ட கல்வெட்டுச் செய்திகளும் படுக்கைகளுமே நிறைந்திருக்கக் கண்டோம். இவைகளைக் கொண்டு திரு. கி. கா. சு.வின் எண்ணத்தையும் செயலையும் ஆராயின், நாலடியாரைத் தனது சமயத்தைச் சார்ந்ததெனச் சாதிப்பதற்

தொகை பத்திரபாகு சுவாமிகள் காலத்திருந்தே வழங்கிவரும் வரலாற்றுண்மை என்பதையும் எவராலும் மறுக்க வியலாது. இச்சம்பவத்தால் ஜைன முனிவர்களுக்கு எண்ணாயிரவர் என்ற மறு பெயரும் வழங்கி வந்துள்ளது என்பதையும் அறிகின்றோம். இந்திய வரலாற்று நூல்களில் பதிவாகி, வரலாற்றுத் துறைவல்லவர்களால் போற்றப்பட்டு வரும் இவ் வெண்ணாயிரம் ஜைன முனிவர்கள் வரலாற்றை மறைத்து அவர்களை ஆசீவக சமய முனிவர்கள் எனத் துணிந்து திரு. தி. நா. சு. அவர்கள் எழுதியது வியப்புக்குரியது.

இவ்வாறு இலக்கியச் சான்றுகளே யன்றி அம்மலைகளில் காணும் ஜைன அறவோர் பள்ளிகளின் அகச்சான்றுகளும் எண்ணிறந்தவை. இரண்டு ஆண்டுகட்கு முன்னர் யானும் உயர்திருவாளர்கள்: மயிலை-சீனி. வேங்கடசாமி அவர்கள், பேராசிரியர்-சதாசிவ பண்டாரத்தா ரவர்கள், ஊ. ஜெயராமன் அவர்கள், மா. சு. சம்பந்தம் அவர்கள், மற்றும் சில நண்பர்களும் மதுரையைச் சுற்றியுள்ள திருப்பரங்குன்றம், ஆனைமலை, சமணர்மலை, ஆந்தைமலை, அழகர்மலை ஆகியவற்றிலுள்ள அறவோர் பள்ளிகளைக் கண்டு வந்தோம். அம் மலைகளில் ஜைன சமய தீர்த்தங்கரர் சிலைகள் முக்குடைகளுடன் விளங்குகின்றன. பாரீஸ்வநாதர் சிலை, மகாவீரர் சிலைகள் பற்பல சின்னங்களுடன் அப்பள்ளிகளில் காட்சி யளிக்கின்றன. ஜைன முனிவர்களின் படுக்கைகளும், கல்வெட்டுச் செய்திகளும் கண்கொள்ளாக்காட்சியாக விளங்குகின்றன. இவ்வாறு இயற்கையா யமைந்திருக்கும் மலைக்குகைகளாம் ஜினப்பள்ளிகளை அக்கிருத்திம சைத்தியாலயம் என வடமொழியில் அழைப்பர். இவைபோன்று ஆஜீவக சமயத்திற்குரிய சின்னங்கள் மருந்துக்கேனும் ஆங்கு காணவில்லை. மதுரைக்கு மேற்கே கம்பம் போகும் பாதையில் 6 மைல் தூரத்திலுள்ள சமணர் மலையைச் சுற்றிப்பார்க்கையில் இடையில் மற்றொருமலை தென்பட்டது.

கியலாமையால் இன்று நின்று நிலவும் சமண சமயத்தையும் சார்ந்ததாகக் கொள்ளக்கூடாதெனும் எண்ணத்தால் இத் தகைய செயலில் இறங்கியுள்ளாரென்பது தெற்றென விளங்கி விட்டது. இதனுல் இவர் கூறும் மற்ற மலைகளைப் பற்றிய செய்திகளும் கருத்துக்களும் வீண்வாதம் என்று விலக்கு வோம்.

நாம் இதுவரை ஆராய்ந்தறிந்ததன் பயனுக நாலடியார் ஜைன அறவோர்களாலியற்றப் பெற்றதென வழிவழி வழங்கி வரும் வரலாறே உண்மை என்றும், பதுமனுர் கடவுள் வாழ்த்துச் செய்யவில்லை என்றும், கடவுள் வாழ்த்தில் காணும் வானவில் உவமை மக்கள் வாழ்க்கையின் நிலையாமையைக் குறிப்பதே யன்றி, கடவுளுக்கு உவமை அல்ல என்றும், எண்ணுயிரம் மூகர் என்பவர்கள் எண்ணுயிரம் ஜைன முனிவர்களே யென்றும் அவ்வறவோர்கள் கலைவளர்த்த மலைகளே எண்பெருங்குன்றங்கள் என்றும், குன்றின் மேலிட்ட விளக்குபோல் விளங்கக் கண்டோம்.

தமிழ்ச்செல்வியின் தாய்வீடாம் ஜைன அறவோர்களின் வழி வளர்ந்த நூல்கள் யாவும் உலகுக்கே உரை செய்யும் பொது நூல்களாக, அன்பு நூல்களாக அமைந்திருப்பதை நேரிதின் ஆய்ந்தோர் நன்கு உணர்வர். நமது கொள்கையை வலியுறுத்த,

“ அறுபொருளும் ஐம்பதமும் நாற்கதியும் யார்க்கும்
உறுவதமும் வீட்ட தொளியும்—போதுமறையான்
முன்னுரைத்தான் முக்குடைக்கீழ் மூவா முதல்வனன்றிப்
பின்னுரைத்தா ருண்டோ பிறர் ”

என்த் தோத்திரத் திரட்டு வெண்பாவும் விளக்குகின்றது. எனவே,

"பாலும் நெய்யும் உடலுக் குறுதி
வேலும் வாளும் அடலுக் குறுதி
ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"

என்னும் பழம் பெரும்பாட்டைப் பாடி, தமிழ் மறையாம் திருக்குறள் போலவே நாலடியாரும் ஜைன அறவோர்களால் இயற்றப்பெற்ற அறநூலே என அறிந்து பெருமை கொள்வோம்!

**வாழ்க தமிழகம்! வளர்க தமிழ்மொழி! வெல்க நல்லறம்!**

## நாலடியாரைப் பற்றிய பண்டைய வரலாற்றுச் சிறப்புரைகள்

" வெள்ளான் மரபுக்கு வேதமெனச் சான்றோர்
எல்லாருங் கூடி எடுத்துரைத்த—சொல்வாய்ந்த
நாலடி நானூறு நன்கினி வென்மனத்தே
சீலமுட னிற்கத் தெளிந்து " (1)

" மன்னன் வழுதியர் கோன்வையைப் பேராற்றின்
எண்ணி இருநான் கோடாயிரவர்—உன்னி
எழுதியிடு யேட்டில் எதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார் " (2)

" எண்ணாயிரவர் இசைத்த வெண்பா நானூறுங்
கண்ணுமிந் நாலடியாரைக் கற்றுணரத்—தண்ணார்
திருக்குருகூர் மாறனையே தேர்ந்துமறை தேர்ந்த
தருக்குருகூர் மாறனையே நேர் " (3)

" நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு " (4)

" பாலு நெய்யு முடலுக் குறுதி
வேலும் வாளும் மடலுக் குறுதி
ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி " (5)

" பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் " (6)

" நாலடி இரண்டடி கற்றவனிடத்து
வாயடி கையடி யடிக்காதே " (7)

" நாலடி வள்ளுவ ராமேயிப் பாலை நடந்த பெருங்
காலடி மேலடி நானடியே கட்டுரலிற்பட்ட

7627



பாலடி சில்வெண்ணெ யுண்டோ னரங்கன் பனிவரையில்
வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகு நன்றே" (8)

" நானூறும் வேதமா நானூறு நானூறு
நானூறுங் கற்றற்கு நற்றுணையா—நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு " (9)

---

## அதிகார வகுப்பு

" வளங்கெழு திருவொடு வையக முழுதும்
உளங்குளி ரின்பத் தின்ப முவப்ப
வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாஅங்
கெண்பெருங் குன்றத் திருந்தவ முனிவரர்
அறம்பொரு ளின்பம் வீடெனு மிவற்றின்
திறம்பிற ரறியுந் திறத்தை நாடிப்
பண்புற வெடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியலெண் ணாயிர மிவற்றுட்
பாரெதிர் கொண்டு பரவி யேத்த
நீரெதிர் வந்து நிரையணி பெற்ற
மேனாற் றகையின் விதிமுறை பிழையாஅ
நானூ றவற்றி னயந்தெரிந் தோதிய
மறுமலர்த் தண்டார்ப் பதுமன் றெரிந்த
ஐயமில் பொருண்மை யதிகா ரந்தாம்
மெய்யா நலத்த வெண்ணைந் தவற்றுள்
அறவியல் பதிமூன் றரசர் [illegible]
பொருளிய விருபு [illegible]
ஆன்ற வகை [illegible] றென மொழிக [illegible]ன்
சான்றோ ரே [illegible] கருமக் [illegible] "

---

சாது அச்சுக்கூ[illegible], இராயப்பேட்டை, சென்னை-14.

76 27

பொருளாதார சமத்துவமாகிய
"மிகுபொருள் விரும்பாமை" என்னும் பேரறத்தை
முதன் முதல் உலகுக்கு உரைத்தவர் யார்?
காரல் மார்க்ஸ், லெனின், மகாத்மா காந்தியடிகள்
ஆகிய மாபெருந் தலைவர்களருளிய அரசியல்
தத்துவத்தின் மாண்பு யாவை?

என்னும்

உண்மைகளை அறியவேண்டின்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள்

இயற்றியருளிய

# அருகன் அருகே அல்லது விடுதலை வழி

அணா எட்டு

*

# பொருளும் அருளும்

அல்லது

# மார்க்ஸியமும் காந்தியமும்

ரூபா ஒன்று

ஆகிய இரு பெரும் நூல்களை வாங்கிப் படியுங்கள்

*

முருகவேள் புத்தகசாலை,
15, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14